# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் அவசரக்கூட்டம் நிகழும் சோபகிருது வருடம் 09.11.2023ம் தேதி வியாழன்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. | | | |
| 09.11.2023 | 175 | அரசாணை நிலை எண்.23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022ன்படி, **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–23**ன் கீழ் ரூ.118.00 இலட்சத்திற்கு அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 சர்வே எண்.602/3ல் புதிய வாரச்சந்தை கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு 04.01.2023 வழங்கி பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.<br>மேற்கண்ட வாரச்சந்தை பகுதிகளில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக வாரச்சந்தை மேடை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.150.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரியலூர் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் வாரச்சந்தை மேடை அமைக்கும் பணிகளுக்கான தொகையினை ஏதேனும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் அரசு மானியம் வேண்டி திட்டமதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்றம் அனுமதி எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1401/2023/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 09.11.2023 | 176 | அரசாணை நிலை எண்.173 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.12.2022ன்படி, **உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (I&A) 2022–23**ன் கீழ் ரூ.780.00 இலட்சத்திற்கு அண்ணாசிலை அருகில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு 17.02.2023 அன்று வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.<br>மேற்காணும் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய வளாகத்தில் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் ஒரு பகுதி மட்டுமே அனுமதிக்கப்பட்டு அதில் ரூ.780.00 இலட்சத்திற்கு பணிகளில் நடைபெற்று வருகிறது. வரைபடத்தில் மீதமுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் வணிகவளாகம்/கழிவறை மற்றும் சுற்றுசுவர் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.380.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரியலூர் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் மீதமுள்ள இடத்தில் வணிகவளாகம்/கழிவறை கட்டும் பணிகளுக்கான தொகையினை ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் அரசு மானியம் வேண்டி திட்டமதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்றம் அனுமதி எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1401/2023/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 09.11.2023 | 177 | அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தெருக்களின் பெயர்களை பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அறியும் வண்ணன் அனைத்து தெருக்களின் பெயர்கள் குறிப்பிட்ட பெயர் பலகை பொருத்தும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.13.50/– இலட்சத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3987/2023/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 09.11.2023 | 178 | அரியலூர் நகராட்சியின் எல்லை பகுதியினை பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அறியும் வண்ணன் நகராட்சி எல்லை பகுதிகளில் அரியலூர் நகராட்சி தங்களை அன்புடன் வரவேற்கிறது மற்றும் நன்றி மீண்டும் வருக என்ற பெயர் பலகை பொருத்தும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.7.25/– இலட்சத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4415/2023/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 09.11.2023 | 179 | அரியலூர் நகராட்சிக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி உள்ள இடங்களில் குளோரினேஷன் செய்யும் சிறுமின்விசை மோட்டார்கள் அவ்வப்போது பழுதடைந்து விடுவதால் குளோரினேஷன் செய்யும் பணியில் ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டு இனிவரும் காலம் மழைகாலம் என்பதால் பணியின் அவசியம் கருதி 8 எண்ணிக்கை புதிய சிறுமின் மோட்டார் பொருத்த பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.13.25/– இலட்சத்தினை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4400/2023/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 09.11.2023 | 180 | அரியலூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் வாகனங்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால், நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள், பாதாள சாக்கடை பணிகள், குடிநீர் விநியோகப்பணிகள் மற்றும் பொது சுகாதாரப்பணிகள் ஆய்வு மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதால், வாகனங்களின் ஏற்படும் பழுதுகளை உடன் சரி செய்ய வேண்டிய நிலை உள்ளதால், பணியின் அவசியம் அவசரம் கருதி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,50,000/–த்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3485/2023/இ1) | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td>09.11.2023</td>
<td>181</td>
<td>அரியலூர் நகராட்சியின் மூலம் மாவட்ட விளையட்டு அரங்கில் 15.08.2023 அன்று கொண்டாடப்படவுள்ள சுதந்திர தினவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளை ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதின்படி, விலைப்புள்ளிகள் கோரியதில் 10.08.2023 அன்று கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>பி.ராமலிங்கம், தெற்குத்தெரு, நாயக்கரபாளையம் கிராமம், ரெட்டிபாளையம் போஸ்ட், அரியலூர்</th><th>M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், புது மார்க்கெட் தெரு, அரியலூர்</th><th>M/s.அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</th></tr>
<tr><td></td><td>அட்டவணை</td><td>1</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>1</td><td>சுதந்திர தினவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளான பந்தல் அமைத்தல் மற்றும் அலங்காரப்பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>ரூ.162600/–</td><td>ரூ.155122/–</td><td>ரூ.149855/–</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் அட்டவணை வரிசை எண்-3ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அரசு நிகழ்ச்சி என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்பவருக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்<br>
(ந.க.எண். 3121/2023/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>182</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.001/2022/வ.அ1 நாள்.12.05.2023ன்படி அரியலூர் நகராட்சியின் மூலம் வாரச்சந்தை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு தேவையான மேசைகள், நாற்காலிகள், அலமாரிகள் மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்திட ஆகும் தொகை ரூ.16.03 இலட்சத்திற்கு தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டதில், திட்டமதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.5.27 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.10.76 இலட்சத்தினை நகராட்சி நிதி மற்றும் 15வது நிதிக்குழு மானியம் ஆகியவற்றில் செலவினம் மேற்கொள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி, அறிவுசார்மையம் கட்டிடத்தை நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் அஸ்திவாரம் Isolated footing முறையில் அமைக்க திட்டமதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் முதல்வர், துறைத்தலைவர், அமைப்பியல் துறை அண்ணா பொறியியல் கல்லூரி, பட்டுக்கோட்டை அவர்களின் வடிவமைப்பில் மண்ணின் தன்மை (Soil Test) அறிக்கையின்படி, கட்டிட வடிவமைப்பில் கட்டிட அடித்தளத்திற்கு Pile foundation அமைக்க பரிந்துரை செய்யப்பட்டதால், திட்டமதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட தொகையை செலவிடப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் தொகை ரூ.16.03 இலட்சத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டநிதி மற்றும் மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்க நடவடிக்கை உள்ளது. எனவே, இப்பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் பெற்று மேல்நடவடிக்கைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.2050/2023/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>183</td>
<td>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வருகை புரிவதை முன்னிட்டு அரியலூர் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விபரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர் அவர்கள் மூலம் காலை மற்றும் மாலை தினசரி நாளிதழில்களில் 26.07.2023 மற்றும் 27.07.2023 அன்று வெளியிடப்பட்டது. முதல் கட்டணமாக 3 நாளிதழுக்கு இரண்டாவது கட்டமாக 3 நாளிதழ்களுக்கும் விளம்பரக்கட்டணத்தொகை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக அரசியல் அதிர்வு என்ற மாத இதழுக்கு ரூ.9,800/–க்கு விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்காணும் மாத நாளிதழுக்கான செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3808/2023/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>184</td>
<td>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் கடிதம் ந.க.எண்.45/செ.ம.தொ.அ/2023, நாள்.30.09.2023ன் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, அரியலூர் நகராட்சியில் நடைபெற்று வரும் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளின் விபரத்தினை ஆயுதபூஜை தினத்தன்று வெளிவரும் தினத்தந்தி தொழில்மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.11550/–ம், மாலை மலரின் ஆயுத பூஜை சிறப்பு தொழில்மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.12600/–ம் மற்றும் தினகரனின் தொழில்மலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.26,250/–ம் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்காணும் நாளிதழுக்கான செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3896/2023/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>185</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.21062/2023/SS நாள்.06.10.2023ன்படி, மூலதன மான்ய நிதி திட்டம் (CGF) மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு மான்யம் (O&M) 2023–24 (Phase III) கீழ் அரியலூர் நகராட்சிக்குட்பட்ட ஆஸ்பத்திரி சாலையில் (பெரம்பலூர்–மானாமதுரை தேசிய நெடுஞ்சாலை) மேம்பாலம் அமைக்கும் போது சேதமடைந்த கழிவு நீர் குழாய் மற்றும் ஆள் இறங்கும் குழிகள் ஆகியவற்றை புனரமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புதுறையின் மூலம் தினத்தந்தி நாளிதழில் 20.10.2023 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான விளம்பரம் கட்டணத்தொகை ரூ.15,120/–னை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.40/2006/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>09.11.2023</td><td>186</td><td>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.001/2022/வ.அ1 நாள்.12.05.2023ன்படி அரியலூர் நகராட்சியின் மூலம் வாரச்சந்தை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு தேவையான மேசைகள், நாற்காலிகள், அலமாரிகள் மற்றும் பிற வசதிகளை ரூ.16.03 இலட்சம் மதிப்பீட்டில் செய்திட நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதின்படி, விலைப்புள்ளிகள் 05.10.2023 அன்று கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>M/s.Shuruthi Engineering, Ariyalur</th><th>M/s.Yaminee Electrical Projects Pvt.ltd, Chennai</th><th>M/s.Shri bhagyalakshmi Engineering, Ariyalur</th></tr>
<tr><td></td><td>அட்டவணை</td><td>1</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>1</td><td>அரியலூர் நகராட்சியின் மூலம் வாரச்சந்தை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு தேவையான மேசைகள், நாற்காலிகள் மற்றும் அலமாரிகள் கொள்முதல் செய்தல்</td><td>ரூ.16,00,967/–</td><td>ரூ.16,20,777/–</td><td>ரூ.16,48,844/–</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் அட்டவணை வரிசை எண்-1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Shuruthi Engineering, Ariyalur என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அரசின் திட்டப்பணி என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Shuruthi Engineering, Ariyalur என்பவருக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் எற்கலாம்.<br>
(ந.க.எண். 2050/2023/இ1)
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>187</td><td>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.158, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>செக்யூர் வோல்ட் செக்யூரிட்டி சிஸ்டம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 0.44 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.23 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.23 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3699/2023/இ1)
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>188</td><td>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.159, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>செக்யூர் வோல்ட் செக்யூரிட்டி சிஸ்டம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 0.07 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.36 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.36 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3700/2023/இ1)
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>189</td><td>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.160, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>செக்யூர் வோல்ட் செக்யூரிட்டி சிஸ்டம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 0.16 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.25 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.25 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3701/2023/இ1)
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>190</td><td>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.161, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>செக்யூர் வோல்ட் செக்யூரிட்டி சிஸ்டம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 0.92 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.43 சதவீதம் குறைவு</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.43 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3702/2023/இ1)</td><td></td></tr>
<tr><td>09.11.2023</td><td>191</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.164, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.சுதாகர், அரசலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 2.48 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.பரமசிவம் ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.005 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.005 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.பரமசிவம் ராமலிங்கம், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3705/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>192</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 பகுதிகளில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து கழிவு நீர் செல்லாமல் தேங்கி போக்குவரத்திற்கு இடையூராகவும் மற்றும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு விளையும் அபாயம் உள்ளது.மேற்படி இடத்தில் ரூ.3,00,000/–ம் மதிப்பீட்டில் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>செக்யூர் வோல்ட் செக்யூரிட்டி சிஸ்டம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 0.12 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.47 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.47 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3716/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>193</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.167, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>செக்யூர் வோல்ட் செக்யூரிட்டி சிஸ்டம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 0.13 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.33 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.33 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம் என்ற நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3708/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>194</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.170, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.சுதாகர், அரசலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 3.19 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.பரமசிவம் ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.005 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.005 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.பரமசிவம் ராமலிங்கம், அரியலூர் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3711/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>195</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.171, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.சுதாகர், அரசலூர்</td><td>மதிப்பீட்டை விட (+) 2.65 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.பரமசிவம் ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.005 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.02ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.005 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.பரமசிவம் ராமலிங்கம், அரியலூர் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3712/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>196</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16ல் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் ரூ.3,00,000/–அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.172, நாள்.22.09.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 03.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>மதிப்பீடு</td></tr>
<tr><td>1</td><td>திரு.ராஜா, அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட (–) 0.11 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>அன்னப்பூ டிரேடர்ஸ், ஜெயங்கொண்டம்</td><td>மதிப்பீட்டை விட (+) 6.07 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.01ல் காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.11 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.ராஜா, அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3713/2023/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>197</td>
<td>எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ளும்பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால், அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சிறிய மற்றும் பெரிய மழைநீர் வடிகால்களை தூர் வாரிடவும், தூர் வாரப்பட்ட மண்ணை அப்புறப்படுத்திடவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3895/2023/எச்–1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>198</td>
<td>SBM 2.0 பதிட்டத்தின்கீழ் Indian Swachhata League 2.0 (ISL 2.0) எனும் தலைப்பில் வரும் 15.09.2023 முதல் 02.10.2023 வரை தூய்மை இந்தியா திட்டம் தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 9514/2022/SBM–2. நாள். 04.09.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரியலூர் நகராட்சி பகுதிகளில் 15.09.2023 முதல் 02.10.2023 வரை போட்டிகள், மருத்துவ முகாம்கள், தூய்மை இந்தியா கொண்டாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 3776/2023/எச்–1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>199</td>
<td>அரியலூர் நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் தற்போது 2 BOV–க்கள் மட்டுமே உள்ளது. 12 BOV–க்கள் பழுதடைந்துள்ளது. அவற்றில் 8 BOV–க்களில் பேட்டரி மற்றும் மோட்டார் பழுதடைந்துள்ளது. அவற்றை பழுதுநீக்கம் செய்தால் மட்டுமே இயங்கும் நிலையில் உள்ளது. எனவே 8 BOV வாகனங்களை பழுதுநீக்கம் செய்திட ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண்.3258/2023/எச்–1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>200</td>
<td>தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழையினை எதிர் கொள்ளும் பொருட்டு, தற்போதுபயன்பாட்டில் உள்ள புகைமருந்து அடிக்கும் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், புகை மருந்து அடிக்கும் இயந்திரம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வாங்கி வழங்கப்பட்டது என்பதாலும் அதனை அடிக்கடி பழுதுநீக்கி பராமரிக்க வேண்டி உள்ளது. அதனால் புதியதாக வெளிப்புற புகைமருந்து அடிக்கும் இயந்திரம் (Outdoor Fogging Machine) இரண்டு எண்ணிக்கையும், உள்புற புகைமருந்து அடிக்கும் இயந்திரம் (Indoor Fogging Machine) ஐந்து எண்ணிக்கையும், புகை அடிக்கும் மருந்து பைரித்திரம் (Pyrethrum) 100 லிட்டரும் தேவைப்படுவதால், ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண். 3044/2023/எச்–1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>201</td>
<td>இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு சீருடை பெற்று வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.50 இலட்சத்திற்கும், தையல்கூலி ரூ. 30,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
அரசாணையின்படி, தீபாவளி பண்டிகைக்கு சீருடை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 3997/2023/எச்–1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>202</td>
<td>அரியலூர் நகராட்சி தற்காலிக பேருந்து நிலைய கடைகளுக்கான பொது ஏல அறிவிப்பு கீழ்கண்ட ஏலப்பட்டியலில் கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு ஒப்படைப்பு செய்யும் காலம் முதல் 31.03.2024 முடிய ஓராண்டு காலத்திற்கு பொது ஏலம் 60 எண்ணிக்கை (தரைவாடகைக்கு). மேற்படி பொது ஏலம் ஏல அறிவிப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்தி மக்கள் தொடர்புதுறை அலுவலகத்தில் ஏல அறிவிப்பை 30.04.2023 அன்று தினமணி நாளிதழில் விளம்பரம் செய்ததற்கான பட்டியல் தொகை ரூ.10,458/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1808/2023/அ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>203</td>
<td>இந்நகராட்சி பொதுசுகாதார வாகனம் ஈச்சர் கம்பேக்டர் TN.61 C.6872 வாகனம் FC பணிக்காக ரூ.1.50 இலட்சம் மன்றத்தில் ஏற்கனவே பொருள் வைக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது அந்த வாகனத்திற்கான கூடுதல் பழுதுகள் கண்டறியப்பட்டு அவற்றை பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. அக்கூடுதல் செலவினம் தொகை ரூ..1.00 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
பொதுசுகாதார பணி என்பதால் அவசர அவசியம் கருதி, மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 3016/2023/எச்–1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>09.11.2023</td>
<td>204</td>
<td>அரியலூர் நகராட்சி அரியலூர் தெற்கு கூட்டுப்பட்டா எண்.20567–ன்படி அ.ந. சர்வே எண். 444/4B-0.16.75 ஏர்ஸ் நிலம், கூட்டுப்பட்ட எண்.20562–ன்படி அ.பு.சர்வே எண்.444/5 – 0.03.50 ஏர்ஸ் நிலம் இரண்டிலும் ஒன்று கலந்து 0.50 ஏக்கர் (515.925ச.மீ) பரப்பளவு கொண்ட இடத்தில் மனுதாரர் திருமதி.சு.உமாமகேஸ்வரி என்பரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலவலகம் அரியலூர் மாவட்ட கோப்பு எண்.415/2023/அ.மா, நாள்.10.05.2023, அன்று மனைப்பிரிவிற்கு 07/2023, நாள்.15.05.2023 அன்று கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br>
மனுதாரர் அரியலூர் தெற்கு கிராம சர்வே எண்.444/4B, 5ல் 0.50 ஏக்கர் (515.925ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் மொத்தம் 7 எண்ணிக்கை மனைகள் உள்ளன 7 மனைகளையும் மனைவரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட கோரியுள்ளார்.<br>
மேற்படி மனைபிரிவில் பொது உபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள் மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள்</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திருமதி.உமாமகேஸ்வரி இனாம் சாசனம் பத்திர பதிவு ஆவணம் எண்.1367/2023-ன்படி அரியலூர் 1நீ இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 11.05.2023-ல் நகராட்சி ஆணையருக்கு இனாம் சாசனம் பத்திரம் மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது திறவிடங்கள் விபரம் பின்வருமாறு.<br><br><u>சொத்து விபரம்</u><br>அரியலூர் மாவட்டம், அரியலூர் பதிவு மாவட்டம், அரியலூர் 1நீ இணைச்சார்பதிவகத்தைச் சேர்ந்த அரியலூர் வட்டம், அரியலூர்(தெற்கு) கிராமத்தில்<br>1. கூட்டுப்பட்டா எண்.20567–ன்படி அ.ந.சர்வே எண். 444/4B – 0.16.75 ஏர்ஸ் நிலம்<br>2. கூட்டுப்பட்டா எண்.20562–ன்படி அ.பு சர்வே எண். 444/5 – 0.03.50 ஏர்ஸ் நிலம் இரண்டிலும் ஒன்று கலந்து.<br><u>மனை பிரிவு சாலை :</u><br>நிலையிலுள்ள நகராட்சி தார் சாலைக்கும் (வடக்கு), மனைகள், பொது உபயோகம் (A) மற்றும் TANGEDCO (B) –க்கும் (கிழக்கு), சார்வே எண்.444/4A –க்கும் (தெற்கு), புல எண்.449 (ஏரி)–க்கும் (மேற்கு) இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் கிழமேல் இருபுறமும் 10மீட்டர், தென்வடல் மேல்புறம் 47.90 மீட்டர், கீழ்புறம் 53.20 மீட்டர் மற்றும் மூலை முடக்கும் சேர்த்து கூடுதல் 506.625 ச.மீட்டர்ஸ் ஆகும்.<br><u>பொது உபயோகம் – (A) :</u><br>மனைகளுக்கும் (கிழக்கு), TANGEDCO (B)-க்கும் (வடக்கு), உத்தேச மனைப்பிரிவு சாலைக்கும் (மேற்கு), புல எண்.444/4A-க்கும் (தெற்கு) இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் கிழமேல் ஜாதியடி 10, தென்வடல் ஜாதியடி 10–க்கு கூடுதல் 100 சதுரடிக்கு சமமான 9.30 ச.மீட்டர்ஸ் ஆகும்.<br>ஆகவே மேற்படி இனங்கள் இந்த பெயரளவிலான நன்கொடை ஆவணத்தில் சம்மந்தப்பட்டது.<br>அரியலூர் தெற்கு சார்வே எண். 444/4A, 5 0.20.25 ஏக்கர் 50செண்ட் (506.625ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் மொத்தம் 7 எண்ணிக்கை மனைகள் உள்ளன 7 மனைகளையும் மனைவரன்முறைப்படுத்தி அனுமதி வழுங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் முன்அனுமதி பெற்று அரியலூர் தெற்கு சர்வே எண். 444/4A, 5 0.20.25 ஏக்கர் 50செண்ட் (506.625ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் மொத்தம் 7 எண்ணிக்கை மனைகள் உள்ளன 7 மனைகளையும் மனைவரன்முறை படுத்தி அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>09.11.2023</td><td>205</td><td>இயக்குநர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்.P-05/117/NCD-MTM/S1/2023, நாள்.22.10.2023ல் உலக சுகாதார அமைப்பின் தரவுகள்படி நடப்போம் நலம் பெறுவோம் என்பதற்கினங்க பொது மக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் எட்டு கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடைபாதைகள் ஏற்படுத்தி, தினந்தோறும் நடைபயிற்சி மேற்கொள்ள ஊக்குவிப்பதோடு ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மக்களுடன் இணைந்து மாவட்ட அலுவலர்கள், சுகாதாரப்பணியாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் சுகாதார நடைபயிற்சி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட விளையாட்டு மைதானத்திலிருந்து அண்ணாசிலை வழியாக மாவட்ட சுகாதார அலுவலகம் வரை சுகாதார நடைபயிற்சியினை (Health Walking) மேற்கொள்ளும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி வழிதடங்களில் கிரானைட் கல்களில் இருக்கை வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து தருவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,83,000/–த்திற்கு நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் மூலம் பணியினை உடனடியாக மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மன்றம் அனுமதி எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 4319/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>206</td><td>நிலைய அலுவலர், தீயணைப்பு–மீட்பு பணி நிலையம், அரியலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.240/V/2023, நாள்.24.05.2023ன்படி, அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் தீ தடுப்பு சாதனங்கள் எதுவும் இல்லாத காரணத்தால், தீ விபத்து காலங்களில் பயன்படும் வகையில் ABC-6Kg-4 Nos, Co2-2.5Kg-2 Nos தீயணைப்பான்கள் புதிதாக வாங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளிக்காட்சி ஆய்வுக்கூட்டத்தில் புதியதாக கட்டப்பட்டு திறப்பதற்கு தயார் நிலையில் உள்ள நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையக்கட்டிடத்திற்கும் தீயணைப்பான்கள் பொருத்த அறிவுறுத்தப்பட்டது. எனவே, நகராட்சி அலுவலகம் மற்றும் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையக்கட்டிடத்திற்கு ABC - 6Kg - 8 Nos, Co2 - 2.5Kg - 4 Nos தீயணைப்பான்கள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.83,000/–த்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் மூலம் பணியினை உடனடியாக மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்றம் அனுமதி எதிர்நோக்கி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 2050/2023/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>09.11.2023</td><td>207</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட விளையாட்டு மைதானத்திலிருந்து அண்ணாசிலை வழியாக மாவட்ட சுகாதார அலுவலகம் வரை சுகாதார நடைபயிற்சியினை (Health Walking) மேற்கொள்ளும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி வழிதடங்களில் கிரானைட் கல்களில் ஆறு இருக்கை வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் குடிநீர் வசதிகள் ரூ.1,83,000/–த்திற்கு பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதின்படி, விலைப்புள்ளிகள் 02.11.2023 அன்று கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>M/s.Sri bhagyalakshmi Engineering, Ariyalur</th><th>M/s.Jai marudhi pipe company, Ariyalur</th><th>M/s.Chandra Agencies, Ariyalur</th></tr>
<tr><td></td><td>அட்டவணை</td><td>1</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>1</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட விளையாட்டு மைதானத்திலிருந்து அண்ணாசிலை வழியாக மாவட்ட சுகாதார அலுவலகம் வரை கிரானைட் கல்களில் இருக்கை வசதிகளை ஏற்படுத்துதல்</td><td>ரூ.1,83,000/–</td><td>ரூ.1,88,894/–</td><td>ரூ.1,91,868/–</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் அட்டவணை வரிசை எண்-1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Sri bhagyalakshmi Engineering, Ariyalur என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அரசின் திட்டப்பணி என்பதால் மன்றத்தினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Shribhagyalakshmi Engineering, Ariyalur என்பவருக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் எற்கலாம்.<br>(ந.க.எண். 4319/2023/இ1) | |

(ஓம்)திருமதி.க.சாந்தி
நகர்மன்றத்தலைவர்,
அரியலூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையர் (கூ.பொ)
அரியலூர் நகராட்சி